## தி.மு.க. ஆட்சியின் போது வருவாய் பற்றாக்குறை குறைக்கப்பட்டுள்ளது!

# தி.மு.க. மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைப்பதா?

## மின்துறை வெள்ளை அறிக்கை த.வெ.க. அரசின் வசதிக்காகவே வெளியிடப்பட்டுள்ளது!

### முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி பேட்டியில் - மின்துறை அமைச்சருக்கு பதிலடி!

**சென்னை, ஜூன் 26**

**மின்துறை வெள்ளை அறிக்கை வெளியிட்டு தி.மு.க. மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன் வைத்த மின்துறை அமைச்சருக்கு தி.மு.க. முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி பதிலடி கொடுத்துள்ளார்.**



இது குறித்து முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

இன்று தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட்டுள்ளனர். கடந்த ஐந்தாண்டுகள் திராவிட மாடல் ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் நலிவடைந்து கிடந்த மின்சார வாரியம் காப்பாற்றப்பட்டது.

கடந்த ஐந்தாண்டுகளில் எங்களின் கழக தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது மின்துறைக்கு தேவையான நிதிகளை ஒதுக்கிசீரானமின்விநியோகத்திற்கு வித்திட்டார்.

கடந்த ஐந்தாண்டு திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டின் மின் தேவையானது ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்தே வந்துள்ளன. அப்படி மின் தேவை அதிகரித்த போதும் மக்கள் பாதிக்கப்படாத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**வருவாய் பற்றாக்குறை குறைக்கப்பட்டுள்ளது!**

இப்போது வெளியிடப்பட்டுள்ள வெள்ளை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள வருவாய் பற்றாக்குறையானது 2011-16 இல் 56,361 கோடி , 2016-21 இல் 58,534 கோடி ரூபாய். முந்தைய அதிமுக ஆட்சிக் காலத்தில் மூன்று கட்டங்களாக மின்சார கட்டணம் ஏற்றப்பட்டது. 37% , 3.5% , 16% என அந்த கட்டண உயர்வு இருந்தது. அப்படி மின் கட்டணம் ஏற்றப்பட்ட போது கூட வருவாய் பற்றாக்குறை என்பது ரூ. 56,000 கோடி. அதற்கடுத்து ரூ58,000 கோடி என்ற அளவிற்கு உயர்ந்திருந்தது. ஆனால் கடந்த எங்களின் ஐந்தாண்டு ஆட்சியில் வருவாயானது ரூ 1,48,77, 856 உயர்ந்து ரூ.4,97,996 ஆக இருந்தது. வருவாய் பற்றாக்குறை ரூ 34,447 கோடியாக குறைக்கப்பட்டது. அதிமுக ஆட்சியில் 58,000 வருவாய் அதிகரித்த போது செலவும் அதிகரித்துள்ளது பற்றி கூறும் மின்சாரத்துறை அமைச்சர் அந்த செலவுகள் எதற்காக செய்யப்பட்டுள்ளன என்ற தகவலை மட்டும் மறைத்து விட்டார். அதையும் வெளிப்படையாக மக்கள் முன் கூறி இருக்க வேண்டும் ஆனால் அதை த.வெ.க. அரசு மறைத்துவிட்டது.

அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் 13.5% வட்டி க்கு பல்வேறு வங்கிகளில் கடன் வாங்கப்பட்டிருந்தது. அதை எல்லாம் சீர் படுத்தி 9.5% வட்டி என்ற அளவிற்கு குறைக்கப்பட்டது. இதன் மூலம் ஆண்டுக்கு 1200-1500 கோடி ரூபாய் சேமிக்கப்பட்டது. அதேபோல பிளை ஆஸ் (FLY ASH) விற்பனை ஆண்டுக்கு 90 கோடி ரூபாய் என்றிருந்ததை ஆண்டுக்கு 160 கோடி ரூபாய் என்ற அளவிற்கு வருவாய் உயர்த்தப்பட்டது.

**ஆண்டுக்கு ஆண்டு மின் தேவை அதிகரிப்பு!**

2019 - 20 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் மின் தேவை என்பது 94,947 மில்லியன் யுனிட் அதுவே 2020-21 இல் 93,344 , 2021-22 இல் 98,674 மில்லியன் யுனிட், 2022-23 இல் 1,03,546 மில்லியன் யுனிட், 2023-24 இல் 1,11,504 மில்லியன் யுனிட், 2024-25 இல் 1,16,813 மில்லியன் யுனிட் ஆக 94,947 மில்லியன் யுனிட் லிருந்து 1,16,813 மில்லியன் யுனிட் ஆக மின் தேவை அதிகரித்துள்ளது. ஏறத்தாழ 25,000 மில்லியன் யுனிட் அதிகரித்துள்ளது. அப்படி அதிகரிக்கும் போது அதற்கான கொள்முதலை அதிகரிக்க வேண்டும் , உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இதற்கான செலவினம் என்பதும் அதிகரித்துள்ளது இதனை வெள்ளை அறிக்கையில் வெளியிட்டிருக்க வேண்டும்.

**தி.மு.க.வின் திட்டங்களே பட்டியலிடப்பட்டுள்ளன!**

அதேபோல இந்த வெள்ளை அறிக்கையில் திமுக வின் திட்டங்களையே பட்டியலிட்டுள்ளனர்.

2021 இல் திமுக ஆட்சி பொறுப்பை ஏற்ற போது மின்சார வாரியத்தின் கடன் 1,59,731கோடி இருந்தது. ஆண்டுக்கு 15,000 கோடி வட்டி மட்டுமே கட்டி வந்தோம். ஐந்தாண்டுகளில் முந்தைய ஆட்சியில் வாங்கிய கடனுக்கான வட்டி மட்டுமே 75,000 கோடி கட்டி உள்ளோம். இதை கூறாமல் மறைத்துள்ளனர்.

அதே போல அறப்போர் இயக்கம் தொடர்ந்துள்ள வழக்கில் ராஜஸ்தான் மின் மாற்றி கொள்முதலோடு தமிழ்நாட்டை ஒப்பிடுவதே தவறானது. நமது டெண்டர் முறை வேறு அவர்களுடையது வேறு. நாம் 25 ஆண்டுகள் நிலைத்திருக்க கூடிய தரமான மின் மாற்றிகளை வாங்குகிறோம். ஆனால் அவர்களுடைய மின்மாற்றி வாழ் நாள் 16 ஆண்டுகள் தான். அதே போல ஐந்தாண்டுகள் மெயிண்டனன்ஸ் அந்நிறுவனங்களின் பொறுப்பு அதற்காக நாம் 5% நிதியை பிடித்தம் செய்து வைத்துள்ளோம்.

ஆனால் ராஜஸ்தான் அரசு மூன்று வருடங்கள் மெயிண்டனன்ஸ், 0.5% நிதி மட்டுமே பிடித்தம் செய்கிறார்கள். தரமான பொருளுக்கும் டூப்ளிகேட் பொருளுக்குமான விலை வேறு வேறு ஆக தான் இருக்கும். நாம் தரமான மின் மாற்றியை வாங்குகி உள்ளோம். அனைத்து டெண்டர்களும் ஆன்லைன் முறையில் வெளிப்படையாக நடந்துள்ளது. நாம் நிர்ணயித்துள்ள தர அளவுகளை குறைக்காமல் , நிபந்தனைகளை மாற்றாமல் புதிய அரசு எவ்வளவு ரூபாய்க்கு கொள்முதல் செய்வார்கள் என்பதை பார்ப்போம்.

**துணை மின் நிலையங்கள்!**

அதேபோல கடந்த ஆட்சியில் எந்த கட்டமைப்பும் செய்யவில்லை என சொல்கிறார் அமைச்சர் ஆனால் அவர் வெளியிட்டுள்ள வெள்ளை அறிக்கையிலேயே எங்களது ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட கட்டமைப்பு நடவடிக்கைகளும், புதிய மின் உற்பத்தி நிலையங்களும் இடம் பெற்றுள்ளன. 99,573 மின்மாற்றிகள் புதியதாக நிறுவப்பட்டுள்ளதை வெள்ளை அறிக்கையிலேயே கூறியுள்ளார்கள். 423 துணை மின் நிலையங்கள் அறிவிக்கப்பட்டு பல துணை மின் நிலையங்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளன.

இப்படி வெள்ளை அறிக்கையிலேயே நாங்கள் செய்த திட்டங்கள் இடம் பெற்றிருந்தும் அதை திரித்து அமைச்சர் பேசி உள்ளார்.

வட சென்னை அனல் மின் திட்டம் நிலை 3 , உடன் குடி மின் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் திமுக ஆட்சியில் தொடங்கப்பட்டன.

எண்ணூர் அனல் மின் நிலைய பணிகள் 75% நிறைவு பெற்றது.;

குண்டாறு மின் திட்ட பணிகள் 85% முடிந்துவிட்டது; கொல்லிமலை மின் திட்டம் 90% முடிந்துவிட்டது.

**தி.மு.க. ஆட்சியிலேயே 300 ஊழியர்களுக்கான பதவி உயர்வு!**

சமீபத்தில் தவெக அரசு வெளியிட்ட 300 ஊழியர்களுக்கான பதவி உயர்வு என்பது திமுக ஆட்சியில் இறுதி செய்யப்பட்டது. அதே போல சமீபத்தில் வழங்கிய பணி ஆணைகள் கடந்த ஆண்டு திமுக ஆட்சியில் TNPSC தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இப்படி திமுக அரசு செய்த செயல்களுக்கு தங்களின் ஸ்டிக்கர் ஒட்டும் வேலையை செய்து வருகின்றனர். ஏன் இதனை வெளிப்படையாக இந்த அரசு தெரிவிக்கவில்லை.

**அவதூறு பரப்பினால் வழக்கு தொடருவோம்!**

மேலும் கடந்த ஆட்சியில் மின் வாரியத்துறை தொடர்பாக எங்கள் தலைவரது குடும்பத்தையோ, எதிர்க்கட்சி தலைவர் அவர்களின் நண்பர்களையோ இணைத்து அவதூறு பரப்பினால் அவர்கள் மீது

இப்போது முதல்வரின் தனி செயலர் ஆக நியமிக்கப்பட்டுள்ள அவரது சினிமா PRO வான ஜெகதீஷ் தான் தமிழ்நாட்டின் மொத்த நிர்வாகத்தையும் பார்க்கிறார் என சொன்னால் அதை ஏற்றுக்கொள்கிறார்களா.?

**மின் வெட்டு: ஆய்வுக் கூட்டமே நடத்தவில்லை!**

மின் வெட்டு பிரச்சினையால் மக்கள் அவதியுற்று வருகின்றனர். அதை தீர்க்க ஆய்வுக் கூட்டமே நடத்தவில்லை . அதை நான் எடுத்து சொல்லி கேள்வி கேட்டும் இன்று வரை பதில் இல்லை. தங்களின் நிர்வாகத் திறமை யின்மையை மூடி மறைக்க தி.மு.க. மீது ஆதாரமற்ற அவதூறுகளை கூறிக்கொண்டு இருக்காமல் மக்களின் பிரச்சனைகளை தீர்க்க இந்த அரசு நவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

---

### பிரதமர் பதவியை விட, பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றமே முக்கியமென்று

# மண்டல் கமிஷன் பரிந்துரையை நடைமுறைப்படுத்தியவர் வி.பி.சிங்!

## முன்னாள் பிரதமர் வி.பி.சிங் பிறந்தநாளையொட்டி – தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஜூன் 26–**

**பிரதமர் பதவியை விட பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றமே முக்கியமென்று மண்டல் கமிஷன் பரிந்துரையை நடைமுறைப்படுத்தியவர் வி.பி.சிங் என்று தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**



இது குறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

இந்தியாவின் சமூகநீதிக் காவலர் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்களின் பிறந்த நாள் இன்று.

பிரதமர் பதவியை விட, பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றமே முக்கியமென்று மண்டல் கமிஷன் பரிந்துரையை நடைமுறைப்படுத்தியவர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற நண்பராக தோளோடு தோள் நின்ற பண்பாளர்.

பதவியைவிட கொள்கையே பெரிது என்று வாழ்ந்து மறைந்த வி.பி.சிங் அவர்களின் புகழைப் போற்றுவோம்!

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

## வாக்குறுதி கொடுத்து வஞ்சித்த த.வெ.க. அரசு!

# கருப்பு பேட்ஜ் அணிந்து திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் விவசாயிகள் தர்ணா!

## “கடன் தள்ளுபடி எங்கே?” – அரசுக்கு நேரடி கேள்வி!

திருவள்ளூர், ஜூன் 26:

தேர்தல் காலத்தில் விவசாயிகளின் தோளில் கைபோட்டு வாக்குறுதிகளை அள்ளி வழங்கிய த.வெ.க. அரசு, ஆட்சிக்கு வந்த பிறகு அந்த வாக்குறுதிகளை மறந்துவிட்டதா என்ற கேள்வியை எழுப்பும் வகையில், திருவள்ளூர் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் நலன் காக்கும் கூட்டம் போராட்ட அரங்கமாக மாறியது.



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் கவிதா தலைமையில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள், திடீரென கருப்பு பேட்ஜ் அணிந்து தரையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். விவசாயக் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்வதாக அறிவித்த அரசின் வாக்குறுதி இது வரை நிறைவேற்றப்படாததால், கடும் அதிருப்தியடைந்த விவசாயிகள் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

“விவசாயிகள் நலன்” என்று விளம்பரங்களில் பெருமை பேசும் அரசு, நிஜத்தில் விவசாயிகளின் வேதனையை கேட்கத் தயாராக இல்லை என்றும், கடன் சுமையால் விவசாயிகள் நாளுக்கு நாள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டு வருவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றம்சாட்டினர்.

போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளிடம் ஆட்சியர் பேச்சுவார்த்தை நடத்தி, கோரிக்கைகள் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என்று உறுதியளித்ததைத் தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது. இருப்பினும், “வாக்குறுதி நிறைவேறும் வரை போராட்டம் தொடரும்” என்ற மனநிலையிலேயே விவசாயிகள் இருந்தனர்.

செய்தியாளர்களிடம் பேசிய விவசாயிகள், “எதிர்க்கட்சிகள் தூண்டிவிட்டதால் போராட்டம் நடத்துகிறோம் என்ற அரசுத் தரப்பின் குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானது. இது எங்கள் வயிற்றுப் போராட்டம். எந்த அரசியல் கட்சியின் தூண்டுதலும் இல்லை. அரசு சொன்ன வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்பதே எங்களின் ஒரே கோரிக்கை” என்று தெரிவித்தனர்.

விவசாயிகளின் கண்ணீரைத் துடைப்போம் என்று கூறி ஆட்சிக்கு வந்த அரசு, இன்று அதே விவசாயிகளை கருப்பு பேட்ஜ் அணிந்து ஆட்சியர் அலுவலகத்தில் தரையில் அமர்ந்து போராடும் நிலைக்கு தள்ளியிருப்பது வேதனைக்குரியது”வாக்குறுதி கொடுத்தது அரசு;

வாக்குறுதியை நினைவூட்ட போராடுவது விவசாயிகள்; இதுதானா த.வெ.க. ஆட்சியின் விவசாயி நலன்?”என்ற கேள்வி திருவள்ளூர் மாவட்டம் முழுவதும் எதிரொலிக்கிறது.

---

## தங்க மோதிரமா? தரமான மகப்பேறு சிகிச்சையா?

# தமிழ்நாடு அரசு தனது முன்னுரிமைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும்!

### மனிதநேய மக்கள் கட்சி தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, ஜூன் 26

மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கும் திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளதை மறுபரிசீலனை செய்து இத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியை ஊரக பகுதிகளில் உள்ள அரசு மருத்துவமனைகளின் பிரசவ அறைகளை மேம்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

தமிழ்நாட்டின் பல அரசு மருத்துவமனைகளில் மகப்பேறு அறைகளில் நெரிசல், மருத்துவப் பணியாளர் பற்றாக்குறை, போதிய படுக்கை வசதியின்மை மற்றும் உபகரணக் குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றன. பல ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் இந்த குறைபாடுகளின் மத்தியில் பிரசவ சேவைகளைப் பெற வேண்டிய நிலை உள்ளது.

இந்நிலையில், புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்குவதற்காக கோடிக்கணக்கான ரூபாய்களை செலவிடுவது அரசின் முன்னுரிமை சரியான திசையில் உள்ளதா என்ற கேள்வியை எழுப்புகிறது.

குழந்தையின் கையில் தங்க மோதிரம் அணிவிப்பதைவிட, தாயின் உயிரைக் காக்கும் நவீன மகப்பேறு அறை (வார்டு), குழந்தையின் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்தும் சிறப்பு சிகிச்சைப் பிரிவு, போதுமான மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் ஆகியவையே மக்களுக்கு உண்மையில் தேவை.

மக்களின் வரிப்பணத்தில் செயல்படும் அரசின் கடமை, காட்சிப்படுத்தும் திட்டங்களை அறிவிப்பது அல்ல; மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நீடித்த முதலீடுகளை மேற்கொள்வதாகும்.

தங்க மோதிரம் சில நாட்களுக்கு செய்தியாக இருக்கலாம்; ஆனால் மேம்படுத்தப்பட்ட அரசு மருத்துவமனைகள் பல தலைமுறைகளுக்கு நன்மை பயக்கும்.

எனவே, தமிழக அரசு பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கும் திட்டத்தை கைவிட்டு, அதற்காக ஒதுக்கப்படும் நிதியை குறிப்பாக ஊரக அரசு மருத்துவமனைகளின் மகப்பேறு அறைகள், குழந்தைகள் நலப் பிரிவுகள் மற்றும் மருத்துவ கட்டமைப்பு மேம்பாட்டிற்குத் திருப்பிவிட வேண்டும். அதுவே சமூக நலனுக்கும், தாய்-சேய் பாதுகாப்பிற்கும், பொது சுகாதார முன்னேற்றத்திற்கும் ஏற்ற பொறுப்பான முடிவாக இருக்கும்.

இவ்வாறு மனிதநேய மக்கள் கட்சி தலைவர் எம் எச். ஜவாஹிருல்லா தெரிவித்துள்ளார்.

---



சமூக நீதிக் காவலர் மேனாள் இந்திய பிரதமர் வி.பி.சிங் அவர்களின் 95 ஆம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் நேற்று (25.06.2026) அவரது படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மேனாள் சட்டமன்ற உறுப்பினர் பா.தாயகம் கவி, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



2001 இல் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை அன்றைய ஆளுங்கட்சி அ.தி.மு.க. கைது செய்ததை கண்டித்து மதுரை மாநகர் மாவட்டத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகளான ஏழு பேர்ஆர்ப்பாட்டத்தில் மதுரையில் கைது செய்யப்பட்டு அந்த வழக்கு கிட்டத்தட்ட 25 வருடங்கள் நடைபெற்று தற்போது அதில் நான்கு ஆண்டு தண்டனை வழங்கி கிட்டத்தட்ட 15 நாட்களுக்கு முன்பு மத்திய சிறையில் கழகத்திற்காக சிறை சென்ற நிர்வாகிகளான மதுரை மாநகர் மாவட்டம் ஆரப்பாளையம் பகுதி கழக செயலாளர் எஸ் எஸ் மாறன் மற்றும் மேலமாசி வீதி பகுதி கழக துணை செயலாளர் எஸ் கணேசன் மற்றும் மதுரை மாநகர் மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் கோபாலகிருஷ்ணன் மூவரும் விடுவிக்கப்பட்ட அனைவரும் மதுரை மாநகர் மாவட்ட கழக செயலாளர் கோ. தளபதியைச் சந்தித்த வாழ்த்துப் பெற்றனர்.